# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### இலங்கையின் பாலுற்பத்தி கூட்டுறவுத் துறையினருக்கான ஆளுமை விருத்தி செயல்திட்டம்

பால் துறை மேம்பாடு குறித்த விசேட ஆளுமை விருத்தி செயல்திட்டம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக பாலுற்பத்தி துறையின் அதிகாரிகள் உள்ளிட்ட 25 உறுப்பினர்களைக் கொண்ட பேராளர்கள் குழு ஒன்று 2026 மார் 9-19 வரை இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது. இலங்கையின் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் அதிகாரிகளும் இதில் உள்ளடங்கியிருந்தனர்.

2. 2025 ஏப்ரலில் இலங்கைக்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இலங்கை அதிகாரிகளுக்கான மேம்பட்ட ஆளுமை விருத்தி செயல்திட்டத்துக்காக 700 தனிப்பயனாக்கப்பட்ட ஆசனங்களை வருடாந்தம் ஒதுக்குவதாக அறிவித்த செயல்திட்டத்தின் அங்கமாக இந்நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

3. குறித்த பத்து நாள் பயிற்சித் திட்டம், புனேயில் உள்ள வைகுந்த் மேத்தா தேசிய கூட்டுறவு முகாமைத்துவ நிறுவனத்தில் (VAMNICOM) இந்திய அரசால் நடத்தப்பட்டது. இதில், கூட்டுறவு வணிக மாதிரிகள், பால் பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள், பால் உற்பத்திப் பொருட்களின் அபிவிருத்தி, பால்ப்பொருள் தர உத்தரவாதம் மற்றும் பால் பெறுமான சங்கிலி அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான தொழில்நுட்ப மற்றும் கருப்பொருள் அடிப்படையிலான அமர்வுகள் இடம்பெற்றன. அத்துடன் அனுபவ ரீதியான கற்றலின் ஓர் அங்கமாக, பங்கேற்பாளர்கள் AMUL Dairy Plant, Sahyadri Farms, Venkateshwara Co-operative Power & Agro Processing Ltd, Katraj Dairy ஆகிய நிறுவனங்கள் மற்றும் புனேயில் உள்ள விவசாயக் கல்லூரியின் கால்நடை வளர்ப்பு மற்றும் பாலுற்பத்தி விஞ்ஞான திணைக்களம் ஆகிய இடங்களுக்கும் கள விஜயங்களை மேற்கொண்டனர்.

4. இந்த செயல் திட்டத்தின் மூலமாக இந்தியாவின் வெற்றிகரமான கூட்டுறவு பாலுற்பத்தி கட்டமைப்பு தொடர்பாக பங்கேற்பாளர்கள் அறிந்துகொண்ட அதேவேளை அவர்களது தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ ரீதியான ஆளுமைகளும் வலுவடைந்துள்ளன. அதுமட்டுமல்லாமல் நெருக்கமான நிறுவக ரீதியான தொடர்புகள் மற்றும் அறிவு பரிமாற்றத்தினையும் இது மேம்படுத்துகின்றது.

*******

கொழும்பு
21 மார்ச் 2026